**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 108/2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 12 |

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் |
| Father Name | : | குணசேகரன் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 39 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2025

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி விபத்தில் இறந்து போன இராஜேந்திரன் எனது சித்தப்பா ஆவார். கடந்த 13.01.2023–ஆம் தேதி இரவு 7.45 மணியளவில் பெரம்பலூரிலிருந்து செஞ்சேரிக்கு நானும் எனது சித்தப்பாவும் எனது இருசக்கர வாகனத்தில் சென்றோம். செஞ்சேரிலிருந்து தம்பிரான்பட்டிக்கு செல்லும் பொழுது செட்டிக்குளம் பிரிவு ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுகொண்டிருந்த பொழுது கிழமேல் துறையூர் ரோட்டை கடக்கும் பொழுது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. எனது பின்னால் அமர்ந்திருந்த எனது சித்தாப்பாவிற்கு இடதுகை, இடது கால் மற்றும் தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு

மயக்கம் ஆகிவிட்டது. எனது சித்தப்பா இராஜேந்திரன் ஒரு வாரமாக திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து இறந்துவிட்டார். விபத்திற்கு காரணம் யார் என்று எனக்கு தெரியவில்லை. காரை ஓட்டிய ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. நான் சிகிச்சையின் போது சுயநினைவின்றி இருந்தேன். அப்போது போலீசார் எழுதப்பட்ட ஒரு வெள்ளைதாளில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். மேற்படி வெள்ளை தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்துகுறித்து போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்தில் எனது சித்தப்பா இறந்தது தொடர்பாக இழப்பீடு எதுவும் பெறவில்லை. நான் காயம்பட்டதற்கு இழப்பீடு எதுவும் பெறவில்லை. நானும் எதிரி ரெங்கநாதனும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு இழப்பீடு தருவதாக உறுதியளித்ததால் விபத்திற்கு காரணம் யார் என்று எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தனர் என்றும் மேற்படி போலீஸ் விசாரணையில் TN 12 D05 67 என்ற காரின் ஓட்டுநர் ரெங்கநாதன் என்பவர் மேற்படி காரை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எனது வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறிவிட்டு தற்பொழுது எதிரியுடன் சமாதானம் ஆகி சென்றுவிட்டதால்எதிரிக்கு ஆதரவாக

சம்பவத்திற்கு காரணம் யார் என்று எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை :- இல்லை**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**